**செ. கு. எண்: 119** **நாள்: 27.08.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 27.8.2016

4.6.2016 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கோபாலசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தெய்வசிகாமணி என்பவரின் மகன் திரு. ராஜேந்திரன்;

7.6.28016 அன்று தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், குடுமியாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரப்பன் என்பவரின் மகன் செல்வன் விஷால்;

9.6.2016 அன்று திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகரம், காந்தி நகரைச் சேர்ந்த திரு. பரமசிவம் என்பவரின் மகன் செல்வன் யோகேஸ்வரன்;

12.6.2016 அன்று திருவள்ளூர் மாவட்டம், நாரவாரிகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோகுல் என்பவரின் மகன் செல்வன் ராகுல், திரு. அன்பழகன் என்பவரின் மகன் செல்வன் பிரேம்நாத்;

17.6.2016 அன்று விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம். வி.சித்தாமூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுந்தரகவுண்டர் என்பவரின் மகன் திரு. மாணிக்கம்;

24.6.2016 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், அகர எலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. தூண்டி என்பவரின் மனைவி திருமதி ஜானகி;

26.6.2016 அன்று விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், சின்ன சுரைக்காய்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரிசெல்வம் என்பவரின் மகன் திரு. பழனிவேல் முருகன், திரு. குமார் என்பவரின் மகன் திரு. ஜெயபிரகாஷ், இராஜபாளையம் நகரைச் சேர்ந்த திரு. குமாரவேல் என்பவரின் மகன் திரு. ஜோதிவேல்;

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், பெரியாக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. சந்திரசேகரன் என்பவரின் மகன் செல்வன் தனுஷ்;

8.7.2016 அன்று சிவகங்கை மாவட்டம், தமறாக்கி தெற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. பஞ்சவர்ணம் என்பவரின் மகன் திரு. சேதுமாதவன்;

9.7.2016 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டம், அலகரை மேற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. லட்சுமணன் என்பவரின் மகன் திரு. கமலநாதன் என்கிற திரு. செந்தில்நாதன்;

1.8.2016 அன்று மதுரை மாவட்டம் வடிவேல்கரை கிராமத்தைச் சேர்ந்த திரு. சித்திரை விநாயகம் என்பவரின் மகன் திரு. சின்னகாளை;

–– ஆகியோர் பல்வேறு விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **14** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**